**Starting time 12.45 P.M.**

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF, ATTUR**

**O.S. No.94/2017**

Deposition of **P.W.1** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. A. Tamilselvi, Gr. III Bench Clerk of this court, on 05.03.2024 in accordance with the provision of Act 1 of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | : லட்சுமி | Father's Name | : |
| Village | : | Taluk | : |
| Caste | : | Religion | : |
| Calling | : | Age | : |

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :** 1 மற்றும் 2 பிரதிவாதிகள் எனது பெற்றோர்கள் என்றால், ஆமாம். தாவா சொத்தின் புல எண் மற்றும் விஸ்தீரணம் என்ன என்றால், புல எண்.269/7 பி. விஸ்தீரணம் தெரியாது. என்னுடைய சாட்சிய பிரமாண வாக்குமூலத்தை படித்துப்பார்த்து தான் கையொப்பம் செய்தேன் என்றால், ஆமாம். தாவா சொத்தின் விஸ்தீரணம், செக்குபந்தி நான் சொல்லித்தான் பிரமாண வாக்குமூலம் தயார் செய்யப்பட்டது என்றாலும், தற்போது தெரியாது என்று நான் சொல்கிறேன் என்றாலும், சரியல்ல, விஸ்தீரணம் 25, 26 செண்ட இருக்கும்.

2. அது ஆரம்பத்தில் தரிசு நிலமாக இருந்தது என்றால், ஆமாம். எனக்கு எத்தனை வயதில் திருமணம் நடந்தது என்றால், 16 வயதில் திருமணம் நடந்தது. வருடம் 1988 என்றால், ஆமாம். நான் எனது திருமணம் வரை எனது பெற்றோர்கள் மற்றும் அண்ணன் தம்பிகளுடன் தான் இருந்தேன் என்றால், ஆமாம். 1995-ல் நான் ஏற்பட்டதாக கூறும் வாய்மொழி பாகப்பிரிவில் யார் யாருக்கு எந்த எந்த பாகம் ஒதுக்கப்பட்டது என்று நான் கூறவில்லை என்றால், பட்டா நிலங்களை அவர்களே எடுத்துக் கொண்டு தரிசு

நிலங்களை மட்டும் எனக்கு ஒதுக்கினார்கள்.

3. பட்டா நிலத்தின் புல எண்ணையோ, விஸ்தீரணத்தையோ, அது நஞ்சையா, புஞ்சையா என்பது குறித்தோ, அது வீடா மனையா என்பது குறித்து நான் எனது வழக்கில் சொல்லவில்லை என்றால், யாரும் கேட்கவில்லை அதனால் சொல்லவில்லை, என்னுடைய சொத்திற்கு மட்டும் நான் வழக்கு போட்டுள்ளேன். எனது அப்பா நெய்வேலி நிலக்கரி சுரங்கத்தில் வேலையில் இருந்தார் என்றால், ஆமாம். அப்போது எனது தகப்பனார் 50 ஆயிரத்திற்கு மேல் மாத சம்பளம் பெற்றார் என்றால், ஆமாம்.

4. எனக்கு திருமணமானபோது எனது கணவர் என்ன வேலை பார்த்தார் என்றால், கொத்தனார் வேலை பார்த்தார். நான் இந்த வழக்கில் கூறியுள்ளவாறு எனது தகப்பனார் வாய்மொழியாக பாகப்பிரிவினை செய்து எனக்கு தரிசு நிலத்தை பிரித்துக் கொடுத்தார் என்றால், சரியல்ல. எனக்கு திருமணம் ஆன புதிதில் நான் வீடு இல்லை என்று கேட்டதற்காக எனது தகப்பனார் தரிசு நிலத்தின் சிறு பகுதியில் எனக்கு அவருடைய பணத்தை கொண்டு வீடு கட்டி கொடுத்தார் என்றாலும், நான் வருவாய் துறையினரிடம் சிபாரிசு பயன்படுத்தி எனது பெயரில் பட்டா பெற்றுக் கொண்டேன் என்றால், சரியல்ல.

5. அந்த நிலத்தின் மீதியுள்ள இடத்தில் எனது தகப்பனார் மற்றொரு வீடு கட்டி எனது தகப்பனார் வைத்துக் கொண்டு அதில் தான் அவர் குடியிருந்து வருகிறார் என்றால், சரியல்ல, நான்தான் வீடு கட்டினேன். மீதி இருக்கும் காலி இடம் பொதுவாகத்தான் பயன்படுத்தி வருகிறோம்என்றால், சரியல்ல முழு நிலமும் என்னுடைய சுவாதீனத்தில் தான் இருக்கிறது. திருமணத்திற்கு பின்னிட்டு என் கணவர் சவுதி மற்றும் சிங்கப்பூர் நாட்டிற்கு சென்று சம்பாதித்த பணத்தை கொண்டு நான்தான் இரு வீடுகள் கட்டினேன்.

6. சவுதியில் எனது கணவர் எத்தனை வருடங்கள் வேலை பார்த்தார் என்றால், 4 அல்லது 4-1/2 வருடங்கள் இருக்கும். ஆதாரம் தாக்கல செய்துள்ளேனா என்றால், கடவுச் சீட்டை பார்த்தால் தெரிந்துவிடும். எந்த வருடத்திலிருந்து எந்த வருடம் வரை வேலை பார்த்தார் என்றால், ஞாபகம் இல்லை. என் தகப்பனாரின் அப்பா பெயர் என்ன என்றால்,

முத்து செட்டி.

7. முத்து செட்டி அனுபவித்து வந்த தரிசு நிலங்களை அவர் இறப்பிற்கு பின்னிட்டு என் தகப்பனார் அனுபவித்து வந்து பட்டா நிலங்கள் மற்றும் தரிசு நிலங்கள் பொறுத்து என் தகப்பனார் ஒரு உயில் எழுதி வைத்துள்ளார் என்றாலும், அது குறித்து எனக்கு தெரியுமா என்றாலும், தெரியாது.

பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை வேண்டுகோளின் பேரில் ஒத்திவைக்கப்படுகிறது.

Ending Time: 12.34 P.M.

**ஒப்பம்/- என்.திலகேஸ்வரி**
**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஆத்தூர்.**